# வெருகல் கல்லடி கிராமத்தில் பாரம்பரிய கூத்தை முன்னெடுப்பதற்கான செயற்பாடு : வனராணி வடமோடி சிறுவர் கூத்தை மையப்படுத்திய ஓர் பங்குகொள் ஆய்வு

LIBRARY
0 9 OCT 2020

செல்வன் வினாயகமூர்த்தி விக்னேஸ்வரன்

பதிவு இலக்கம்: EU/ IS/ 2013/ AC/ 216

சுட்டிலக்கம்: CS 5366

இவ்வாய்வானது நாடகமும் அரங்கியலும் சிறப்புக் கலைமாணி பட்டத்திற்கான ஒரு பகுதி தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

FAC 765
Project Report
Library - EUSL

நுண்கலைத்துறை,

கலைகலாசாரபீடம்,

கிழக்குப்பல்கலைக்கழகம்,

இலங்கை,

2019.

PROCESSED
MAIN LIBRARY, EUSL

# முன்னுரை

கூத்தரங்கு இன்றைய காலத்துக்கு தேவையான ஒன்றாகும். இவ்வாற்றுகையில் சிறுவர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவரும் கூடி கொண்டாடி மகிழும் களமாகவும் காணப்படுகின்றது. கூத்தாற்றுகை ஆரம்பகாலத்தில் ஒவ்வொரு பிரதேசத்திலும் மிகவும் சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது. ஆனால் நவீனத்துவத்தின் சிந்தனைப் போக்கால் நுகர்வு மனிதர்களின் ஆதிக்கம் அதிகரித்ததால் கூத்து ஆற்றுகை வெளியில் கூத்தின் ஆதிக்கம் குறைவாகவே நிகழ்த்தப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இன்றைய யுத்தம், அனர்த்தம் போன்ற இழப்பினால் ஒவ்வொரு மனிதரும் தங்களையும், தங்கள் கலையினையும் மறந்து பொருளாதாரம், போட்டியான வாழ்க்கை என்ற ரீதியில் தனியன்களாக்கப்கட்டு ஆரோக்கியமற்ற வாழ்க்கை வட்டத்தை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கின்றனர். மக்களுடைய ஒற்றுமை, ஆரோக்கியம் பலப்படுத்தப்பட வேண்டுமாயின் அவர்கள் கூத்தாற்றுகையில் மீண்டும் முழுமையாக ஈடுபடவேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாக காணப்படுவதால் இவர்கள் ஊடாக எமது பாரம்பரிய கலை வளர்க்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் "வெருகல் கல்லடி கிராமத்தில் பாரம்பரிய கூத்தை முன்னெடுப்பதற்கான செயற்பாடு, வனராணி வடமோடி சிறுவர் கூத்தை மையப்படுத்திய ஓர் பங்குகொள் ஆய்வு" எனும் தலைப்பில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. வெருகல் கல்லடி கிராமத்தில் வசிக்கின்ற சிறுவர்களைக் கொண்டு மத்தள அண்ணாவியார் சி.ஞானசேகரம் மற்றும் ஏடு பார்ப்பவர் த.முத்துலிங்கம் அவர்களின் உதவியுடன் இக்கூத்து ஆற்றுகை பயிற்றுவிக்கப்பட்டது. ஆற்றுகையானது தொடர் செயற்பாடுகள் மூலம் முன்னெடுக்கப்பட்டன. சட்டம் கொடுத்தல், சதங்கையணி, அரங்கேற்றம், வீட்டிற்கு வீடு ஆடுதல் போன்ற கூத்தாற்றுகை செயற்பாடுகளை குறிப்பிடலாம்.

கூத்தாற்றுகையினை பாத்திராத இன்றையகால தலைமுறையினருக்கு ஓர் வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் சிறுவர்களை பங்குகொள்ள வைத்து சிறுவர்களை சுதந்திரமாகச் செயற்படுவதற்கான சூழலுக்கு களம் அமைத்துக் கொடுத்து மகிழ்வூட்டலினூடாக அறிவூட்டல் எனும் செயற்பாட்டிற்குள் உள்வாங்கி அனைத்துச் சிறுவர்களும் பாகுபாடின்றி கூடி கொண்டாடி தங்களின் உண்மையான எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் செயற்பாடுகள் இடம்பெற்றன. சிறுவர்கள் தங்களையும், தங்கள் வாழும் சூழலையும், தமது சமுதாயத்தையும் விளங்கிக்கொண்டும் உலகம் தழுவிய அறிவை, அனுபவத்தை பொற்றுக்கொள்ளவும், ஆற்றல்களை வெளிப்படுத்தவும், சவால்களை எதிர்கொள்ளவும், சாதனைகளை புரிவதற்குமாக கூத்தரங்கு மூலம் தயார் படுத்தல் மேற்கொள்ளப்பட்டது.

ஆற்றுகையினூடாக கூத்தினைக் கற்று அதில் தெளிவடைந்ததால் ஆய்வாளரது பிரதேசத்தில் சிறுவர் கூத்தாற்றுகையினை முன்னெடுப்பதற்கான சூழல் உருவாகியது. தொடர் செயற்பாடாக கூத்து அரங்கேற்றப்பட்டுள்ளது. அனைத்துச் சமூகமும் இங்கு

ஒன்று கூடியது. தங்களின் அபிப்பிராயங்கள், பங்களிப்புக்கள் போன்றவற்றை வழங்கினார்கள். சிறுவர்களின் பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளின் திறமையினை நேரடியாகப் பார்த்து மகிழ்ந்தனர். தங்களின் ஒத்துழைப்பை சிறுவர் கூத்தாற்றுகை செயற்பாட்டிற்கும் அதன் அங்கிகாரத்திற்கும் பலம் சேர்க்கும் வகையில் வழங்கியிருந்தனர். சிறுவர் கூத்துச் செயற்பாட்டின் மூலம் பெரியவர்களும் கூத்தில் ஆர்வத்துடன் பங்கு பற்றும் நோக்கில் இவ் ஆய்வு அமைகின்றது.

ஆய்வாளர்.

## பொருளடக்கம்

பக்கம்

உறுதியுரை

நன்றியுரை

முன்னுரை I - ii

பொருளடக்கம் iii - v

அத்தியாயம் 01

ஆய்வு பொது அறிமுகம்

1.1 ஆய்வுத் தலைப்பு ........ 1

1.2 ஆய்வு அறிமுகம் ........ 1 - 3

1.3 ஆய்வுப் பரப்பு ........ 3

1.4 ஆய்வுப் பிரச்சினை ........ 3

1.5 ஆய்வின் கருதுகோள் ........ 3

1.6 ஆய்வின் நோக்கம் ........ 3

1.7 ஆய்வு முறையியல் ........ 4

1.8 ஆய்வுக்கான தரவு சேகரித்தல் ........ 4

1.9 ஆய்வுப் பகுப்பு ........ 4 - 5

1.10 இலக்கிய மீளாய்வு ........ 5 - 6

அத்தியாயம் 02

வெருகல் பிரதேச மக்களின் வாழ்வியலும், பாரம்பரியக் கலைச் செயற்பாடுகளும்

2.1 வெருகல் பிரதேசம் பற்றிய அறிமுகம் ........ 7 - 10

2.2 வெருகல் பிரதேச சமூக அமைப்பு ........ 10 - 12

2.3 வெருகல் பிரதேசத்தின் கலை வடிவங்கள் ........ 12 - 13

2.3.1 வெருகல் பிரதேசத்தின் கூத்துக்கலை .................... 13 - 20

2.3.2 வெருகல் பிரதேசத்தின் ஆடற்கலை .................... 20

2.3.3 வெருகல் பிரதேசத்தின் சிலம்பக் கலை .................... 21- 22

2.3.4 வெருகல் பிரதேசத்தின் சடங்கு சார்ந்த ஆற்றுகைகள் .................... 22 - 24

## அத்தியாயம் 03

## ஈழத்துப் பாரம்பரியக் கூத்தரங்கு

3.1 பாரம்பரிய கூத்து .................... 25 – 30

3.1.2 கூத்து சமூகத்தோடு ஒன்றிணையும் விதம் .................... 30 - 34

3.2 சிறுவர் கூத்தரங்கு .................... 35 – 40

3.2.1 சிறுவர் கூத்தரங்கின் பயன்கள் .................... 40 - 43

## அத்தியாயம் 04

## ஆற்றுகை மையக் கற்றலினூடாக கூத்தைப் புரிந்துக் கொள்ளல்

4.1 ஆற்றுகையினூடாக கூத்தில் பங்குகொண்டதன் மூலம் கற்றுக் கொண்டவைகள் .................... 44 - 47

4.2 கூத்தாற்றுகையில் ஆடல் சார்ந்த அனுபவம் ....................48 – 50

4.3 கூத்தாற்றுகையில் பாடல் சாரந்த அனுவம் .................... 50 - 52

4.4 கூத்து தயார் படுத்தலில் அனுபவம் .................... 52 - 54

4.5 கூத்து களரியமைப்பதில் பரிச்சயம் .................... 54 - 56

## அத்தியாயம் 05

## வெருகல் கல்லடி கிராமத்தில் இடம் பெற்ற வனராணி வடமோடி சிறுவர் கூத்தின் செயற்பாடு

5.1 ஆய்வுப் பிரதேசத்தில் கூத்தரங்கின் தேவைப்பாடு .................... 57 - 60

5.2 கூத்தரங்கச் செயற்பாட்டின் ஆரம்பம் .................... 60 - 62

5.3 சிறுவர் கூத்தின் சட்டம் கொடுத்தல் நிகழ்வு .................... 62 - 67

5.4 சிறுவர் கூத்தின் சதங்கை அணி விழா .......... 67 - 72

5.5 சிறுவர் கூத்தின் அரங்கேற்ற விழா .......... 72 - 75

5.6 சிறுவர் கூத்தின் வீட்டுக்கு வீடு ஆடும் நிகழ்வு .......... 75 - 76

5.7 சிறுவர் கூத்தில் பங்கு கொண்ட சிறுவர்களது அனுபவங்கள் .......... 76 - 85

5.8 கூத்தாற்றுகை தொடர்பான அண்ணாவியாரின் அனுபவப் பகிர்வு..... 85 - 87

5.9 கூத்தாற்றுகை தொடர்பான கொப்பியாசிரியரின் அனுபவப் பகிர்வு... 87 - 88

5.10 வனராணி வடமோடி சிறுவர் கூத்தின் எழுத்துருப் பிரதி .......... 88 – 110

## அத்தியாயம் 06

## ஆய்வுக்கான கூத்தரங்கச் செயற்பாட்டின் வெளிப்பாடுகள்

6.1 கூத்தாற்றுகை செயற்பாட்டின் போது எதிர்கொண்ட பிரச்சினைகளும் சவால்களும் .......... 111 - 115

6.1.2 பாடல் பயிற்றுவிப்பதில் எதிர் கொண்ட சவால்கள் .......... 115 - 117

6.1.3 ஆடல் பயிற்றுவிப்பதில் எதிர் கொண்ட சவால்கள் .......... 117 - 121

6.2 கூத்தாற்றுகையில் சிறுவர்கள் பங்குகொண்ட விதமும் அவர்களிடம் ஏற்பட்ட மாற்றமும் .......... 121 - 124

6.3 கூத்தர்களது குடும்பங்கள் பங்கு கொண்ட விதம் .......... 125 - 127

6.4 கூத்து செயற்பாட்டில் சமூகத்தினர் பங்கு கொண்ட விதம் .......... 128 – 130

6.5 கூத்தாற்றுகையின் பின்னர் சமூகத்திடமிருந்து வெளிவந்த கருத்துக்கள் .......... 130 - 136

6.6 வனராணி சிறுவர் கூத்தாற்றுகை சார்ந்த ஆய்வாளரின் அனுபவப் பகிர்வு .......... 136 – 140

பரிந்துரை .......... 141 - 142

முடிவுரை .......... 143 - 145

உசாத்துணை .......... 146 - 147

பின்னிணைப்பு .......... I - xiv